திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரி பள்ளிகளை இப்பொழுது மிகவும் நெருக்கடியான இடத்தில், அதிகமாகப் பிள்ளைகளை வைத்து, ஆரோக்கியமில்லாத நிலையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை ஆரோக்கியமான இடத்தில், வசதியாக நடத்த, அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடங்களில் அந்த நிலைமை நிலவுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பாரானால் அந்த உணர்வை அரசு பரிசீலனை செய்யும்.

59 —(*வினா எண் 16208) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச சத்துணவு பெறும் $2\frac{1}{2}$ வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக நர்சரி பள்ளி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா!

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ), அரசே கிராமப்புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதனை கொள்கையளவில் ஏற்று 1982-83ம் ஆண்டில் ஏற்கனவே சமூக நலத்துறையினரால் பராமரிக்கப்பட்டுவரும் 4,343 குழந்தைகள் காப்பகங்களில் நர்சரி பள்ளிகள் திறக்க ஆணை வெளியிட்டுள்ளது. இதில் 4,140 அமைப்பாளர்களுக்கு நர்சரி வகுப்பு நடத்துவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு மேற்படி மையங்களில் நர்சரி வகுப்புகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிக்கான பாடத்திட்டத்தின்படி இங்கு தமிழ், ஆங்கிலம், எண் கணிதம் (Arithamatic) மற்றும் சுகாதாரப் பழக்கங்கள் கற்றுத் தரப்படுகின்றன. பள்ளிகளுக்கான கையேடு மற்றும் பாடத் திட்டம் அச்சிடவும் விளையாட்டுப் பொருட்கள் புத்தகங்கள் மரச்சாமான்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டும் தொடர்ந்து நடத்தக்கூடிய வகையில் அரசாங்கத்திடம் திட்டம் இருக்கின்றதா? ஒவ்வொரு ஆண்டும் எத்தனை பள்ளிகளை ஆரம்பிக்க இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு என்பதைப் பற்றி என்னிடம் தற்போது விவரம் இல்லை. இன்னும் 5,000 நர்சரி பள்ளிகளை ஆரம்பிப்பது பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலத் துறையினால் நடத்தப்படும் இது போன்ற நர்சரி பள்ளிகளை கல்வித் துறையுடன் இணைப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதற்கான சிலபஸ் ஏதாகிலும் வகுத்திருக்கிறதா? எதிர்காலத்தில் குழந்தைகள் நன்றாகப் படிக்கவேண்டும், வளர வேண்டுமென்பதற்காக அனாதைக் குழந்தைகள் மட்டும் என்று இல்லாமல், மேலும் அதிகமான குழந்தைகளைச் சேர்க்க அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையங்கள் சமூகநலத் துறையின்கீழ் இயங்கி வருகின்றன. பாடத் திட்டங்கள் சம்பந்தமாக மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல் போன்றவை பள்ளிக் கல்வித்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தென்னாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சுகாதாரப் பயிற்சி நிலையங்கள்

60—(*வினா எண் 18876) திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் அமைத்த சுகாதாரப் பயிற்சி நிலையங்கள் (1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில்) எத்தனை?

(ஆ) அதற்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 1981-82, 1982-83ம் ஆண்டுகளில் தென்னாற்காடு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் புதுச்சத்திரம், வடலூர், மங்களம்பேட்டை ஆகிய மூன்று ஊர்களில் கிராமப்புற சுகாதார பயிற்சி நிலையங்களும், கடலூர் அரசு மாவட்ட மருத்துவமனையில் ஒரு சுகாதாரப் பணியாளர் (பெண்) பயிற்சிப் பள்ளியும் ஆக நான்கு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அவற்றிற்கு ரூ 20.93 லட்சம் செலவிடப்பட்டது.

(முற்பகல் 10-10)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுச்சத்திரம், மங்களம்பேட்டை போன்ற இடங்களில அந்த சுகாதார பயிற்சி நிலையங்களில் போதுமான பணியாளர்கள் இல்லை என்பது உண்மைதானா? மேலும் அங்கே இருப்பவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படாத நிலைமை இருப்பது உண்மைதானா என்பதையும் இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.